குற்றவாளி கூண்டுக்கு வெளியே

"உன் மீது கூறப்பட்டுள்ள குற்றத்துக்கு என்ன சொல்கிறாய்?"

"என்ன சொல்ல இருக்கிறது தர்மப்பிரபு. . . ஏழை. . ."

"ஆடு திருடினது உண்மைதானே! ஒப்புக் கொள்கிறாயா குற்றத்தை?"

"ஆமாம், துரையே! திருடினது உண்மைதான். . . ஆறு குழந்தைகள் எனக்கு. . . பசி– வேலை இல்லை – பட்டினி கிடந்தேன். மனைவியோ மூலையில் படுத்தழுகிறாள். குழந்தைகளோ பசியால் துடித்தன. . . ஒரு வழியும் தெரியவில்லை. . . திருடினேன். ஆடு திருடியது உண்மைதான். நான் ஏழை. . ."

ஏழை, என்பதற்காகச் சட்டம் இரக்கம் காட்டுமா? ஏதோ, பணக்காரன் என்றாலாவது சட்டம், அச்சப்பட்டு, ஏதாவது ஒரு சந்து பொந்து காட்டும், அவன் தப்பித்துக் கொள்ள! ஆடு திருடியவனோ ஆறு குழந்தைகளுக்குத் தகப்பன்; அந்தச் செல்வம்தான் அவனிடம்! ஏழை! ஆடு திருடினான்; ஆரணங்குகளையே திருடி, சட்டத்தின் கண்களில் பொடி தூவிவிட்டு, தப்பித்துக் கொள்ளும் சீமான்கள் உண்டு; இவன் பராரி, எனவே பிடிபட்டான், விசாரணை நடைபெற்றது, குற்றத்தை ஒப்புக் கொண்டான். ஒப்புக் கொண்டதால், இவன் நல்ல உள்ளம் படைத்தவன், ஏதோ பசிக் கொடுமையால் திருடி விட்டானே தவிர, இவன் கெட்டவனல்ல, எனவே பாவம், இவனை மன்னித்து விடுவோம் என்று நீதிபதி கூறினாரா! கூறுவாரா? சட்டம் என்ன ஆவது! இப்படி ஏழைகள் சிக்கிக் கொள்ளும் போதாவது சட்டத்தை நிலை நாட்டாவிட்டால், பிறகு எப்போது தான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்க முடியும்! எனவே, ஆடு திருடிய ஏழை தண்டிக்கப்பட்டான். சட்டம் வெற்றி பெற்றது!

ஆடு திருடி, தண்டிக்கப்பட்ட அந்த ஏழை ஒரு நீக்ரோ.

ஆப்பிரிக்கா நாட்டில் ஜோஹான்ஸ்பர்க் எனும் ஊரில் நடைபெற்றது, சம்பவம்.

ஏழை, எனவே திருடினேன் என்று அந்த நீக்ரோ எடுத்துச் சொன்னது, சட்டத்தின் உள்ளத்தைத் தொடவில்லை, மக்கள் மனதை, உருக்கிற்று. அவர்கள், கள்ளனாக வேண்டிய நிலைமைக்குத் துரத்தப்பட்ட இந்த ஏழையின் நிலைக்கு இரக்கம் காட்டி, தண்டனையை மாற்றுவதற்காக, மேல் கோர்ட்டுக்கு வழக்கைக் கொண்டு போவதற்காக, நன்கொடை திரட்டினர்.

நூறு பவுன் நன்கொடை திரட்டப்பட்டிருக்கிறது!

பரவாயில்லையே, மனிதத்தன்மை இந்த அளவுக்கு மலர்ந்திருக்கிறதா, என்று கேட்கத் தோன்றும். ஆச்சரியம் அதிலே கூட அதிகம் இல்லை, இந்த ஏழை நீக்ரோவிடம் இரக்கம் காட்டி, நன்கொடை திரட்டி இருப்பவர்கள் வெள்ளையர். ஆப்பிரிக்க நாட்டில்! கருப்பரைக் கேவலப்படுத்தும் வெறியன் ஆட்சி செய்யும் நாட்களில்! மனிதத் தன்மை அடியோடு மடிந்து படவில்லை; அவ்வப்போது அதன் மணம் இதயத்துக்கு இன்பமூட்டத்தான் செய்கிறது!

ஏதோ ஒரோர் சமயத்தில் இரக்கம் – மனிதத் தன்மை இவ்விதம் மலருகிறது – ஏழை காப்பாற்றப்படுகிறான். ஆனால், எல்லா ஏழைக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்காது – அது மட்டுமல்ல, பசிக் கொடுமையால் கள்ளன் ஆக்கப்படுபவனைச் சட்டத்தினின்றும் மீட்பதற்காகவே சதா சர்வகாலமும் ஒரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்க இயலாது. எனவேதான் ஏழ்மையைப் போக்கவும், குறைக்கவும், பெருமுயற்சி எடுத்துக் கொள்வதை இன்றைய சர்க்கார், ஆட்சித் திட்டமாகக் கொள்ள வேண்டுமென்பதை நல்லோர் வலியுறுத்துகிறார்கள்.

பசி வந்திடப் பத்தும் பறந்து போம் – என்பது மறுக்கொணாத உண்மையாக இருப்பதைப் பார்க்கிறோம்.

ஏழ்மையின் காரணமாக நல்லவன் தீயவன் ஆகிறான், அவனை அந்தக் கதிக்கு ஆளாக்கிவிடுவது சர்க்கார்தான்! பாரதியாரின் கோபம் இந்தப் பிரச்சினையிலே அளவு கடந்து சென்று, உலகையே அழித்துவிடலாம் என்ற அளவுக்கு ஆத்திரத்தோடு முழக்கமிடச் செய்தது.

தனியொருவனுக்கு உணவு இல்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்றல்லவா பாடினார்.

பாரதியாரின் கோபம் உலகத்தோடு நின்றது – வள்ளுவரோ, ‘ஆண்டவனிடமே சென்று, அச்சமூட்டுகிறார்,

எச்சரிக்கிறார். பிச்சை எடுத்துத்தான் ஒருவன் பிழைத்தாக வேண்டும் என்று நிலை இருக்குமானால், அப்படிப்பட்ட "உலகு இயற்றியானை" ஒழித்துக்கட்டுவோம் என்றே கூறுகிறார்.

உலகையோ உலகு இயற்றியானையோ ஒழித்துக் கட்டு மளவுக்கு ஆற்றல் வேண்டியது கூட இல்லை, குற்றம் பிறப்பதும் குணம் சிறப்பதும் சுற்றுச்சார்பைப் பொறுத்து இருக்கிறது என்ற உண்மையை, ஊராள்வோர் உணர்ந்து, மனிதனுடைய 'சுற்றுச்சார்பு' செம்மைப்படத்தக்க வகையில், காரியமாற்றினாலே போதும் – குற்றம் பெருமளவுக்குக் குறைந்துவிடும்.

இரக்கம் எழத்தான் வேண்டும் – ஒரோர் சமயம் எழத்தான் செய்கிறது என்பதை ஆப்பிரிக்கச் சம்பவம் எடுத்துக் காட்டத்தான் செய்கிறது. ஆனால் இரக்கம் எழும் என்று நம்பிக் கொண்டு இருந்துவிட்டால், போதாது! ஏழையின் வாட்டம் தீர்ந்து விடாது!

ஆறு குழந்தைகளுக்குத் தகப்பனான தரித்திரவான் அந்த நீக்ரோ, அதனால் திருடினான் என்று கூறி அவன்பால் இரக்கம் காட்டியது போல, எப்போதும் கூறிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

"தடிப்பயல்! ஆறு குழந்தைகளாம்! அதனாலே கொள்ளை அடிப்பதா!"

"இன்று ஆடு திருடினான், நாளைக்கு மாடு, பிறகு வீடு நுழைவான். இப்படிப்பட்டவர்களைச் சும்மாவிடக் கூடாது. சமூகத்துக்குப் பெரும் ஆபத்து"

"பட்டினியா? பசியா? பிச்சை எடுப்பதுதானே! இல்லையானால் எங்காவது குளம் குட்டையில் விழுந்து சாவதுதானே! திருடுவதா துணிந்து!"

என்று நாலுபேர் நாலு விதமாகத்தான் பேசுவார்கள் – ஏசுவார்கள்.

"ஐயா! நான் ஏழை! பசிக்கொடுமை, இந்தக் கெட்டகாரியம் செய்தேன்!" – என்று முதலில் கூறும் 'குற்றவாளி' கூண்டுக்குள் தள்ளப்பட்டு, பழகிப்பழகி பிறகு, குற்றம் புரிந்தேன் என்று ஒப்புக் கொள்ளும் நிலையையும் மாற்றிக் கொண்டு, ஏய்க்கவும், தப்பித்துக் கொள்ளவும்தான் முயற்சிப்பான் – மெள்ளமெள்ள கைதேர்ந்த கள்ளனே ஆகி, உண்மையிலேயே சமூகத்துக்குப் பேராபத்தாகவே ஆகிவிடுவான்!

"போடா மடையா! போயும் போயும், மூணாவது வகுப்பு வண்டியிலே போயா, மூட்டை அடிச்சே! பஞ்சைப் பயலே,

மூணாவது வகுப்பு வண்டியிலே நம்மைப்போல ஏழைகள் தானேடா வருவானுங்க – அவங்க தலையிலே கைவைச்சயே, மகா பெரிய சூரன்போலே! நான், ராஜாகுட்டிடா தெரியுமா! பஸ்ட் கிளாஸ் வண்டியிலே படுத்துத் தூங்கிக்கிட்டு இருந்தான் ஒரு சேட், அவனோட தோல் பையை அபேஸ் செய்தேன். தெரியுமா! செய்தா அப்படிச் செய்யணும்! பிச்சை எடுத்ததாம் பெருமாளு, அதைப் பிடிங்கிச்சாம் அனுமாருன்னு சொல் வாங்களே, அதுபோல, நீ, மூணாம் வகுப்பு வண்டியிலே போயி, மூட்டையை எடுத்தயே! த்தூ! வெட்கமா இல்லே உனக்கு'' – என்று சிறையிலே, கைதேர்ந்த கள்ளன் 'கத்துகுட்டி' கள்ளனிடம் பேசுவதுண்டு.

இப்படிப்பட்ட 'தேர்ச்சி' பெற்ற கள்ளனெல்லாம், முதன் முதலில் வெட்கம், வேதனை, துக்கம், திகைப்பு, எனும் உணர்ச்சி களுக்கெல்லாம் ஆட்பட்டு, அழுகுரலில் ஐயா! நான் ஏழை! என்று கெஞ்சிப் பேசினவன்தான்.

இரக்கம் அவனுக்குத் துணை நின்று, அவன் ஒரு வழக்கிலே இருந்து தப்பித்துக் கொண்டாலும், மீண்டும் மீண்டும் அவனை வறுமை கொட்டிக் கொண்டே இருந்தால், அவன் என்ன செய்ய முடியும்? திருடுகிறான், பிடிபட்டால் குளறுகிறான்! சிறையில் தள்ளப்படுகிறான், தேர்ச்சி பெற்று வெளியே வருகிறான்; மீண்டும் திருடுகிறான். கோர்ட் அஞ்சும்படி அதட்டிப் பேசுகிறான்!

இப்படி நிலைமைகள் ஆகாதிருக்க வேண்டுமானால் சமூகத்தின் அடிப்படை ஆபத்து, வறுமை என்ற தெளிவும் அதனைக் களைந்தெறியும் திட்டமும், ஆட்சியாளர்களிடம் இருத்தல் வேண்டும். உபதேசம் செய்வதாலும் சட்டத்தைக் காட்டி அச்ச மூட்டுவதாலும், குற்றங்களைக் களைந்துவிட முடியாது; சுற்றுச் சார்பைச் செம்மைப்படுத்த வேண்டும். 'ஏழை' குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும்போது, உண்மைக் குற்றவாளி வேறு இடத்தில் இருக்கிறான் என்றுதான் பொருள்! குற்றம் புரியவேண்டிய நிலையில் அவனைக் கொண்டு சேர்த்த 'சூழ்நிலை'யை மாற்றாதிருக்கும் உண்மைக் குற்றவாளி இருக்கிறான், வேறு இடத்தில்!

2-10-1955

❄ ❄ ❄ ❄ ❄